## சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – நிலம் – ஒப்படை – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் ஒரே அளவிலான ஆண்டு வருமான உச்ச வரம்பினை ரூ.72,000/–ஆக உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(நி.எ.2(2))துறை

அரசாணை(நிலை) எண்: 5 நாள்: 20.01.2017

துன்முகி– தை 7 திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.287, வருவாய் நிமு1(2)துறை, நாள்:31.5.2000.
2. அரசாணை (நிலை) எண்.51, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(நிஎ2)துறை, நாள்:19.5.2010.
3. அரசாணை (நிலை) எண்.76, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள்:9.9.2010.
4. அரசாணை (நிலை) எண்.31, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(நிஎ2)துறை, நாள்:28.02.2011.

---

**ஆணை:**

வீடற்ற ஏழை மக்களுக்கு இலவசமாக வீட்டுமனை ஒப்படை செய்வது என்பது அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மக்களை சமூகத்தில் இதர இன மக்களுக்கு இணையாக பொருளாதார மேம்பாடு அடையச் செய்யும் பொருட்டு இத்துறை மூலம் செயல்படுத்தப்படும் வீடற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கான இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆண்டு வருமான உச்ச வரம்பினை கிராமப்புறங்களில் ரூ.40,000/– எனவும் நகர்ப்புறங்களில் ரூ.60,000/– எனவும் நிர்ணயித்து பார்வை 4–இல் படிக்கப்பட்ட அரசாணையில்

....2

ஆணையிடப்பட்டது. இந்நிலையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டதின் கீழ் அதிக அளவில் பயன்பெறும் வகையில் தமிழகம் முழுவதும் உள்ளவர்களுக்கு ஒரே அளவாக ஆண்டு வருமான உச்ச வரம்பை ரூ.72,000/–ஆக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ப.அண்ணாமலை
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை – 5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை – 5.
நில நிர்வாக ஆணையர், சென்னை – 5.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
மாவட்ட கருவூல அலுவலர்கள், அனைத்து மாவட்டம்.
மாநில கணக்காய்வு தலைவர், சென்னை – 9,
மாநில கணக்காய்வு தலைவர், சென்னை – 18.
நகல்.
வருவாய்த்துறை, சென்னை – 9.
நிதித்துறை, சென்னை – 9,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள், அனைத்து மாவட்டம்.
தனிவட்டாட்சியர், (ஆதிந) (மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் வழியாக)
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,சென்னை –9.
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,சென்னை – 9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு–1)துறை, சென்னை–9. (இரண்டு படிகள்)
உபரி/இருப்புக்கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கா. தசிவராணி
20/1/2017
பிரிவு அலுவலர்.

20/1/17